செய்தி வெளியீடு எண். 43 நாள். 22.01.2018

**இன்று நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 311 மனுக்கள் பெறப்பட்டது**

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டரங்கத்தில் மக்கள் குறை தீர்வு நாள் கூட்டம் இன்று (22.01.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொது மக்களின் கோரிக்கை மனுக்களை பெறப்பட்டது. இக்கூட்டத்திற்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை புரிந்த பொதுமக்கள் தங்களது தனிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்யவும், உதவிகள் வழங்கிடவும் கோரி மனுக்களை அளித்தனர். இதில் நிலம் சம்பந்தமாக 53 மனுக்களும், சமூக பாதுகாப்பு திட்டம் 83 மனுக்களும், சமூக நலத்திட்டம் 7 மனுக்களும், குடும்ப அட்டை 3 மனுக்களும், ஆதிதிராவிடர் / பிற்படுத்தப்பட்டோர் நலம் 6 மனுக்களும், வேலைவாய்ப்பு 65 மனுக்களும், சட்டம் மற்றும் ஒழுங்கு 8 மனுக்களும், கடனுதவி 2 மனுக்களும், இதரதுறை 41 மனுக்களும், சான்றிதழ் 1 மனுவும், வேளாண்மை / கால்நடைத்துறை / மீன்வளம் 1 மனுவும், அடிப்படை வசதி / போக்குவரத்து / சுகாதாரம் 5 மனுக்களும், ஊரக / நகர்ப்புற வளர்ச்சி 33 மனுக்களும், உழவர் பாதுகாப்புத் திட்டம் 1 மனுவும், கல்வி 1 மனுவும் மற்றும் பேரிடர்கள் 1 மனுவும் ஆக மொத்தம் 311 மனுக்கள் பெறப்பட்டது.

இம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, தகுதியுள்ள பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ர.சக்திவேல், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.நாராயணன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.சீ.ஜானகிராமன் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**